**துணை இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி வனக்கோட்டம், பொள்ளாச்சி அவர்களது செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர் : திரு. கே. பார்கவ தேஜா இ.வ.ப.,**

செ.மு.ஆ.எண். 2337 / 2023 /ப1 நாள். 15.09.2023
(ப.ஆ.எண். 119 / 2023 / ப1)

பொருள் : பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2023–24 ஆம் ஆண்டிற்கு ஒப்புநோக்கு எழுத்தர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்ற பணியாளர்களது பணியினை வரன்முறை செய்து தகுதிகாண் பருவத்தில் அமர்த்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை அவர்களது செ.மு. ஆ.எண். 7795/2023/1 நாள். 31.08.2023 மற்றும் 02.09.2023.
2. வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், கோவை ப.ஆ.எண். 83/2023/ப1 நாள். 04.09.2023 (ந.க.எண். 3604/2023/ப1)
3. வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், கோவை ப.ஆ.எண். 84/2023/ப1 நாள். 07.09.2023. (ந.க.எண். 3604/2023/ப1)
4. துணை இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி ந.க.எண். 2337/2023/ப1 (ப.ஆ.எண். 104/2023/ப1) நாள். 07.09.2023.
5. துணை இயக்குநர், ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி ந.க.எண். 2337/2023/ப1 (ப.ஆ.எண். 105/2023/ப1) நாள். 07.09.2023.

******

பார்வை – 1 ல் காணும் கடிதத்தின் படி, 2023–2024 ஆம் ஆண்டிற்கு ஒப்புநோக்கு எழுத்தர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கி பார்வை – 2 மற்றும் 3 ல் காணும் கடிதத்தின்படி பொள்ளாச்சி வனக் கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்காணும் பணியாளர்கள் பார்வை – 4 மற்றும் 5 ல் காணும் கடிதத்தின் படி அவர்களது பெயருக்கெதிரே குறிப்பிட்ட தேதியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே இவர்கள் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாளான 08.09.2023 மு.ப. முதல் இவர்களது பணியினை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு

உட்பட்டு தற்காலிகமாக வரன்முறை செய்து தகுதிக்காண் பருவத்தில் அமர்த்தி இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு. பா. விக்ரம் | பொள்ளாச்சி வனச்சரக அலுவலகம் | 08.09.2023 மு.ப | 08.09.2023 மு.ப |
| 2. | திரு. சு. நதியா | துணை இயக்குநர் அலுவலகம், பொள்ளாச்சி வனக்கோட்டம் | 08.09.2023 மு.ப | 08.09.2023 மு.ப |

<u>நிபந்தனைகள்</u> : –

1. பணிவரன்முறை செய்த நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிபுரிதலுக்குட்பட்டு இரண்டாண்டுகள் பணியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும்.
2. தனது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து அதற்கான தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும்.
3. தமிழ்நாடு அரசு அமைச்சுப்பணியாளர்கள் விதி எண். 34 ன் படி கீழ்க்காணும் தேர்வுகளை தேர்ச்சி பெற வேண்டும்.
    i. Tamil Nadu Forest Department Code and Accounts
    ii. Forest Department Test – Fundamental Rules of Tamil Nadu Government, Tamil Nadu State Service Rules etc.,

ஒம்/– கே. பார்கவ தேஜா,
துணை இயக்குநர்,
ஆனைமலை புலிகள் காப்பகம்,
பொள்ளாச்சி.

பெறுநர்,
மேற்கண்ட பணியாளர்கள் (சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக)

நகல் – வனச்சரக அலுவலர், பொள்ளாச்சி சரகம், ஆனைமலை பண்ணை.

நகல் – தனியர்களது பணிப்பதிவேட்டிற்கு.

நகல் – செயல்முறை ஆணை இருப்பு கோப்பிற்கு

நகல் – பணி ஆணை கோப்பிற்கு.

உண்மைநகல் / உத்தரவுப்படி–

கண்காணிப்பாளர்

15/9/23